திரு. செ. சதாசிவம் : அரிசன மாணவர்கள் உணவு விடுதி, பின் தங்கிய மாணவர்கள் உணவு விடுதி இவற்றிற்கு கறிகாய், விறகு முதலியவைகள் ஒப்பந்தம் மூலம் பால் சப்ளே செய்வதற்கு ஜில்லாவிற்கு ஒருவர் போட வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. அப்படியிருப்பதால், ஜில்லா பூராவும் அவரால் சப்ளே செய்ய முடியவில்லை. அதனுல் உணவு விடுதிகளுக்கு, விறகு, காய்கறி, பால், வெளிச் சந்தைகளில் வாங்க முடியாமல் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, ஒப்பந்தப் புள்ளிகள் கேட்டு தாலுக்காவுக்கு ஒருவரை நியமனம் செய்து அவர் மூலம் அவற்றை வாங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

முற்பகல் 10·30

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் கிடைக்காத பொருள்களை ஒப்பந்தப் புள்ளி பெற்று வாங்கலாம் என்று விதி இருக்கிறது. ஜில்லா பூராவும் வாங்குகிருர்களா அல்லது தாலுக்கா வாரியாக வாங்குகிருர்களா என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

மேலணையில் மீன் வளர்ப்புப் பண்ணை.

* 278 வினு.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயது கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மேலணையில் மீன் வளர்ப்புப் பண்ணை நிறுவும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அண்மையில் மேலணையில் மீன் வள்ர்ப்புப் பண்ணைகள் நான்கு கட்டப்பட்டுள்ளன. இவற்றைப் பொதுப் பணித்துறை மீனளத் துறையிடம் ஒப்படைத்தவுடன் இவை செயல்படத் தொடங்கும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த மீன் வளர்ப்பிற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது ? அங்கே வளர்க்கப்படும் மீன்களை வேறு பகுதிகளுக்கு அனுப்பும் முயற்சி இருக்கிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நர்சரி இருக்கிறதா என்பது கேள்வி. கட்டப்பட்டிருப்பதாகப் பதில் சொன்னேன். தொகை விவரம் இப்பொழுது என்னிடத்தில் இல்லை. நர்சரி கட்டப்பட்டிருக்கிறது, விரைவில் மேற்கொண்டு வேலைகள் துவங்கப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், விரைவில் என்றுல் எத்தனை மாதங்களில் என்று தெரிவிப்பார்களா ? மேட்டூரில் இருப்பதைப் போல் இங்கேயும் ' கட்லா ஃபிஷ் ' வளர்க்கும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஏறத்தாழ கட்டி முடிக்கும் தறுவாயில் இருக்கிறது. பொதுப் பணித் துறையிலிருந்து மீனளத் துறைக்கு இன்னும் வழங்கப்படவில்லை. வழங்கப்பட்டவுடன் விரைவில்

செயல்படத் தொடங்கும். எல்லா வகை மீன்களும்தான் உற்பத்தி செய்யப்படும். கட்லா ஃபிஷ்களும் உற்பத்தி செய்யப்படும். கெண்டை மீன்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்படும்.

இராதாபுரம் கால்வாயிலிருந்து நீர் வழங்கல்

* 279 விஞ.—திரு. வீ. கார்த்தீசன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா :

நெல்லே மாவட்டம் இராதாபுரம் சானலில் புதிதாக உதயத்தூர் விஜயபதி கிராமங்களில் அடங்கிய குளங்களே சேர்ப்பதற்கென அங்குள்ள விவசாயிகள் அண்மையில் அரசிடம் அனுமதி கேட்டுள்ளனரா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 1971–ம் வருடம் செப்டம்பர் மாதம் அனுமதி கேட்டனர்.

திரு. வீ. கார்த்திசன் : தலேவரவர்களே, அதிக நஞ்சை நிலங்கள் உள்ள இராதாபுரம் பகுதியில் உள்ள குளங்களுக்குப் போதிய தண்ணீர் விடுவதற்கு முயற்சி எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலேவரவர்களே, ஏற்கனவே சேர்க்கப்பட்ட ஆயக்கட்டிற்குப் போக மீதித் தண்ணீர் இருந்தால் மேற்கொண்டு ஆயக்கட்டுகளுக்குத் தண்ணீர் விடுகிருர்கள். இதில் குறைந்தது ஐந்து பாசன காலத்திற்காவது பரிசோதனை நடத்தியாக வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இப்பொழுது இராதாபுரம் கால்வாயில் தண்ணீர் விடுவதற்கு தனிப்பட்ட சிறப்பு விதிகள் ஏதேனும் பிறப்பிக்கப் பட்டிருக்கிறதா ? அப்படியென்றல் அந்த விவரப்படி இன்னும் அதிகரிக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலேவரவர்களே, தனிப்பட்ட சிறப்பு விதிகள் விதிக்கப்பட்டதாகத் தகவல் என்னிடத்தில் இப்பொழுது இல்லே.

* விஞ 280.—திரு. ச. சங்குமுத்துத் தேவா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் கால்வாய் பாசன விவசாயிகளிடமிருந்து பாசன வசதி கோரி 1973–ம் வருடம், செப்டம்பர் மாதத்தில் மனுக்கள் எவையேனும் அரசுக்கு வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?